**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE OF ATTUR**

**SC.No. 396/2018**

**Deposition of: PW -7(LW – 9)**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : டாக்டர்.கண்ணன் | **Father Name :** | |
| **Village** | : | **Taluk** | : |
| **Nationality** | : | **Religion** | : |
| **Calling** | : | **Age** | : |

**Solemnly affirmed by in accordance with the provision of Oath Act 44 of 1969 Date: 18.12.2023 at 12.20 p.m to 12.45 p.m.**

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். அவருடைய வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

1) நான் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக இருந்து தற்போது பணி ஓய்வு பெற்று தம்மம்பட்டியில் வசித்து வருகிறேன். 22.09.2014 ஆம் தேதி சக மருத்துவர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பணியில் இருந்த போது மணிகண்டன், ஈஸ்வரன், ஜானகி மற்றும் அருள்மொழி ஆகியோர்கள் தங்களுக்கு காயம் ஏற்பட்டதாக கூறி சிகிச்சைக்கு அரசு மருத்துவமனைக்கு வந்தார்கள். அன்று காலை 04.00 – 12.30 மணி வரை மேற்படி நபர்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அனைவரையும் பரிசோதித்த மருத்துவர் முதலுதவி செய்து விபத்து பதிவேட்டை ஏற்படுத்தியுள்ளார். அது அதசாஆ.2 ஆகும். அவர் அவர்களை மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்தார். அது அந்த பதிவேட்டிலேயே உள்ளது.

2) மேற்படி மணிகண்டனுக்கு சேலம் அரசு மருத்துவர் காயச்சான்று வழங்கினார். அது அதசாஆ.2 லேயே உள்ளது. அது குறித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியுள்ளேன். அது அதசாஆ 3 ஆகும். அதன் பிறகு ஈஸ்வரனுக்கு சேலம் அரசு மருத்துவர் வழங்கிய காயச்சான்று அதசாஆ.4 . அவருக்கும் சாதாரண காயம் தான். அந்த குறித்த என்னுடைய மருத்துவ சான்று அதசாஆ.5 ஆகும். அதன் பிறகு ஜானகிக்கு சேலம் அரசு மருத்துவர் வழங்கிய காயச்சான்று அதசாஆ.6 . அவருக்கு கொடுங்காயம் என சான்று வழங்கினேன். அந்த

குறித்த என்னுடைய மருத்துவ சான்று அதசாஆ.7 ஆகும். அருள்மொழிக்கு சேலம் அரசு மருத்துவர் வழங்கிய காயச்சான்று அதசாஆ.8 . அவருக்கும் சாதாரண காயம் தான். அந்த குறித்த என்னுடைய மருத்துவ சான்று அதசாஆ.9 ஆகும். காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

3) மணிகண்டன் என்பவர் ஆத்தூர் அரசு மருத்துவமணையில் காலை 04.15 மணிக்கு மருத்துவமனையில் சேர்ந்ததாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். மேலும் அதில் தெரிந்த 8 நபரும் அடையாளம் தெரியாத 2 நபரும் தாக்கியதாகத்தான் உள்ளது என்றால் சரிதான். மேலும் மணிகண்டன் சேலம் அரசு மருத்துவமனையில் நுன்கதிர் எடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. நான் என்னுடைய பதவி பணி அடிப்படையில் தான் சான்று வழங்கப்பட்டது. அதே போல் ஈஸ்வரன் என்பவர் ஆத்தூர் அரசு மருத்துவமணையில் காலை 04.10 மணிக்கு மருத்துவமனையில் சேர்ந்ததாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். மேலும் அதில் தெரிந்த 8 நபரும் அடையாளம் தெரியாத 2 நபரும் தாக்கியதாகத்தான் உள்ளது என்றால் சரிதான். மேலும் அவருக்கும் சேலம் அரசு மருத்துவமனையில் நுன்கதிர் எடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. மேற்சொன்ன மருத்துவ குறிப்புகளை காவல் துறையினர் என்னிடம் கேட்டு பெறவில்லை.

4) அதே போல் ஜானகி என்பவர் ஆத்தூர் அரசு மருத்துவமணையில் காலை 10.30 மணிக்கு மருத்துவமனையில் சேர்ந்ததாக குறிப்பு உள்ளது என்றால் அது 01.30 மணியை குறிக்கும். மேலும் அதில் தெரிந்த 3 நபரும் அடையாளம் தெரியாத 2 நபரும் தாக்கியதாகத்தான் உள்ளது என்றால் சரிதான். மேலும் அவருக்கும் சேலம் அரசு மருத்துவமனையில் நுன்கதிர் எடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மருத்துவ குறிப்புகளை காவல் துறையினர் என்னிடம் கேட்டு பெறவில்லை. அதே போல் அருள்மொழி என்பவர் காலை 12.30 மணிக்கு மருத்துவமனையில் சேர்ந்ததாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். ஜானகி மற்றும் அருள்மொழியும் தங்களை குச்சியால் தாக்கியதாக சொல்லியிருந்ததாக உள்ளது என்றால் சரிதான்.

5) என்னுடைய கருத்துரையை நான் மேற்சொன்னவாறு கொடுத்துள்ளேன். மேற்படி மருத்துவர் அவரிடம் சிகிச்சைக்கு வந்தவர்கள் என்ன சொன்னார்களோ அதை

தான் விபத்து பதிவேட்டில் பதிவு செய்துள்ளார் என்றால் அது அவருக்குதான் தெரியும். மேற்படி காவல் துறையினர் என்னிடம் கருத்துரை பெறுவதற்கு முன்பு சான்று பொருட்கள் காண்பித்து கருத்துரை பெற்றார்களா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. நான் சொல்லியுள்ள காயங்கள் ஒரு நபர் கரடுமுரடான பள்ளத்தில் விழும்போது அது போல் காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan**
**Assistant Sessions Judge,**
**Attur.**